[1992 ஏப்ரல் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவதுபோல் அல்ல. திரு. பழனிசாமி, அமைச்சர் சொல்லுவது போல் அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பில்லை இண்டர்டியூஸ் செய்வதற்கு "If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate, put the question thereon." என்றுதான் இருக்கிறது. நீங்கள் அந்த நேரத்தில் எழுந்து நான் எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டால் அப்போது உங்களுக்கு நான் வாய்ப்பே கூடக் கொடுக்கலாம். இல்லை கொடுக்காமல்கூட இருக்கலாம். அது வேறு. எதிர்க்கிறேன் என்று சொல்லுகிற அந்த நேரத்தை நீங்கள் தவற விட்டு விட்டீர்கள். (குறுக்கீடு) தவற விட்டு விட்டு (மேசையைத் தட்டும் ஒலி) நேரம் தவறிய பிறகு ஏதோ ஒரு சிந்தனையில் (குறுக்கீடு) எழுந்து இப்போது நான் எதிர்க்கிறேன் என்று சொன்னால் எப்படி? நீங்கள் இரண்டாவது எதிர்த்தது எதை எதிர்த்தீர்கள் என்றால் (குறுக்கீடு) ஓட்டு எடுப்பு விட்டதற்குப் பிறகு, அந்தத் தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகு இந்த அவையிலே முடிவு எடுத்ததற்குப் பிறகு, இந்த அவையினுடைய முடிவைச் செயற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்து நிற்கிற நேரத்தில் அதை எதிர்க்கிறேன் என்று சொல்வது என்ன அர்த்தத்தைக் கொடுக்கும் என்று சொன்னால் அவையினுடைய தீர்மானத்தை நிறைவேற்ற முன் வந்த அமைச்சரை எதிர்க்கிறீர்கள் என்றுதான் வரும். எனவே, அது இரண்டாவது வருவது முறையல்ல. நீங்கள் பேசுகிற போது பேசிக் கொள்ளுங்கள்.

(இ) நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன் வடிவு, இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

1992 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி இப்போது நீங்கள் செய்யலாம். (சிரிப்பு).

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.